**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்**

முன்னிலை : திரு.பெ.குமார், பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.04/2023**
**உள்**
**அ.வ.எண்.36/2021**

1. சுப்புலெட்சுமி
2. கேந்திரபாலசுப்பிரமணியன் ... மனுதாரர்கள்/வாதிகள்

....எதிர்....

R. ராமசுப்பிரமணியன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 10.04.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K,ஜோயல்ஹென்றி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.R.ராமசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்டும், மனு அபிடவிட் மற்றும் எதிருரை ஆகியவைகளை பரிசீலித்தும், பார்வையிட்டும் இம்மனுவில் இன்று 12.04.2023 ம் தேதி இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

தாவா சொத்தினை பார்வையிட்டு தாவா 2 ம் தபசில் சொத்து என்ன நிலைமையில் உள்ளது என்பதை நிர்ணயித்து அளவுகள் சகிதம் அளந்து மனு தபசில் சொத்துக்களை சுற்றிப் பார்த்து பூஸ்திகள் மற்றும் அளவுகளுடன், வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல்.

## 2. மனுவின் சுருக்கம்:

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் ஆவர். அசல் வழக்கானது எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சொத்துக்கள் 1ம் வாதியின் மாமியார் சங்கரவடிவம்மாளுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டு பாகப்பிரிவினை மூலம் 1ம் வாதியின் கணவருக்கும், 2ம் வாதிக்கும் ஒதுக்கப்பட்டு அனுபவித்து வரப்படுகிறது. மனு 1ம் அயிட்ட சொத்தை அனுபவிக்க 2ம் அயிட்ட சொத்து காலிமனையாக விடப்பட்டுள்ளது. மேற்படி 2ம் அயிட்ட சொத்திற்கு வடக்கே மனுதாரர்களுக்கும், ராமகிருஷ்ண நாயுடுவிற்கும் பாத்தியப்பட்ட பொதுநடைபாதை இருந்து வருகிறது. அதுகுறித்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்பதால், 2ம் அயிட்ட சொத்திற்கு மட்டும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவில் சொல்லியுள்ள அளவுகளின்படி 2ம் தபசில் சொத்து உள்ளதா? என்பதையும் , மேற்படி சொத்திற்கும், எதிர்மனுதாரர்சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதையும், மனு 2ம் தபசில் சொத்து எதிர்மனுதாரரின் சொத்தைவிட உயரத்தில் உள்ளது என்பதையும், நேரில் பார்த்தால்தான் தெரியவரும் என்பதாலும், மேலும், மேற்படி சொத்திற்கும், எதிர்மனுதாரர் சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதும் தெரியவரும் என்பதல், நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனு தாக்கல்.

### 3. எதிருரையின் சுருக்கம்

மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் பொய்யானது. மனுதாரர்கள் சொல்லியுள்ள விபரங்களை பார்வையிடும்போது, மனு 2ம் தபசில் சொத்து சம்மந்தமாக சாட்சியங்களை சேகரிப்பதற்காக ஆணையரை நியமனம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது. பிராதில் சொல்லாத சங்கதிகளை அடையாளம் காண நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய முடியாது. பிராதில் எழுந்துள்ள பிரச்சனைகளை தீர்மானிக்க நீதிமன்ற ஆணையரின் அறிக்கை எந்த வகையிலும் உதவக்கூடியதாக இல்லை என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாதெனில், மனுசொத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா ? என்பதேயாகும்.

**தீர்வு:**

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதார் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிடப்படவில்லை. இருதரப்பு வழக்கறிஞர்களும் மனு மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளையொட்டியே வாதிட்டனர்.

6. இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை பரிசீலிப்பதற்கு முன்பாக அசல் வழக்கின் நிலையை பார்வையிடும்போது, அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கடந்த 12.02.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டு, 15.02.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டதில் பிரதிவாதி கடந்த 15.03.2021 அன்று தனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி கடந்த 06.12.2021 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து 07.07.2022 ம் தேதி வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டபோது கடந்த 18.02.2022 அன்று மனுதாரர்கள் சீர்திருத்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மனுவானது கடந்த 17.10.2022 அன்று அனுமதிக்கப்பட்டு, பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டு, கூடுதல் எதிர்வழக்குரை பெறப்பட்டு வழக்கு விசாரணைக்காக கடந்த 11.01.2023 அன்று ஒத்திவைக்கப்பட்டபோது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

7. இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை பார்வையிடும்போது. தாவா 2 ம் தபசில் சொத்து சம்மந்தமாக, மேற்படி சொத்து எந்த அளவில் உள்ளது என்பதையும், மேற்படி சொத்திற்கும், பிரதிவாதிகள் சொத்திற்கும் என்ன தொடர்பு உள்ளது என்பதையும் 2 ம் தபசில் சொத்திற்கும், எதிர்மனுதாரர் சொத்திற்கும் இடையே உள்ள உயரம் என்ன? என்பதை அறிந்துகொள்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

8. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் ஏற்படும் பிரச்சனையை தீர்மானிக்க நீதிமன்ற ஆணையரின் அறிக்கை அவசியமானதாக இருந்தால் மட்டுமே, நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யவேண்டும். மாறாக வாதிகளின் வழக்கை நிரூபிக்கும்

வகையில் சாட்சியங்களை சேகரிக்க நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய முடியாது. இந்த வழக்கை பொறுத்தமட்டில் உள்ளபடியே அசல் வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பரிகாரங்களை நிரூபிக்க வாதிகள் தரப்பில் உரிமைமூல ஆவணங்களையும், வருவாய் ஆவணங்களையும் தாக்கல் செய்தாலே போதுமானதாகும். மாறாக, மேற்படி பிரச்சனையை தீர்மானிக்க நீதிமன்ற ஆணையரின் அறிக்கை எவ்வகையிலும் உதவக்கூடியதாக இருக்கப்போவதில்லை.

9. மனுதாரர்களின் சொத்திற்கும், எதிர்மனுதாரரின் சொத்திற்கும் இடையே உயர வேறுபாடுகள் இருக்கும்போது, அதனை சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்கலாம் அல்லது தற்போதுள்ள அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புகைப்படம் எடுத்து அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதன் மூலம் மேற்படி வாதிகள், பிரதிவாதிகள் சொத்திற்கு இடையேயுள்ள உயர வேறுபாட்டை நிரூபிக்கலாம். அதற்காக தாவா சொத்தினை பார்வையிட நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

10. முன்பத்தியில் சொல்லியுள்ளபடி இவ்வழக்கில் எழுந்துள்ள பிரச்சனையை தீர்மானிக்க நீதிமன்ற ஆணையர் அறிக்கை எவ்வகையிலும் உதவக்கூடியதாக இல்லை என்பதால், நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என முடிவு செய்து இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. மனுவின் தன்மை கருதி அவரவர் செலவுதொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக,**

1. இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுதொகை இல்லை

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P KUMAR
Digitally signed by P KUMAR
Date: 2023.04.12 16:40:56 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u> - இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u> - இல்லை**

P KUMAR
Digitally signed by P KUMAR
Date: 2023.04.12 16:41:07 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

கூ.மா.உ.நீ.அம்பை

இ.ம.எண்.4/2023

அ.வ.எண்.36/2021

உத்தரவு

நாள்– 12.04.2023